# சொல்கேட்ட செல்வம்

சாமிநாதனுக்கு மாற்றல் உத்தரவு வந்துவிட்டது. அவருடைய உத்தியோக அநுபவத்திலே இந்த மாற்றல் புது விஷயமல்ல. ஊர் மாறுவது சகஜம். ஆனால் ஒரு மூன்றாண்டுகளாவது இப்போது இருந்த ஊரிலேயே இருக்கக்கூடும் என்று நினைத்திருந்தார். இங்கே வந்து ஓராண்டு முடியவில்லை; மாற்றிவிட்டார்கள்.

"நம் இன்னியை என்ன செய்வது, செல்லம்?" என்று கவலையுடன் மனைவியைக் கேட்டார் அவர். இன்னி அவர்களுடைய அருமைப் பசு. இனிப்பான பால் கொடுப்பவள் என்ற கருத்துடன் பெயரிட்டார் அப்படி. மழுமழுப்பான காவி நிற உடலும், சற்றே வெளிறிய மஞ்சள் நிறக் கால்களும் அளவான சிறிய கொம்புகளும் நீண்ட வாலும் லட்சணமாகப் பொருந்திய அம்சங்களுமாக இன்னி அவர்கள் வீட்டில் கொட்டிலில் நின்றிருந்தாள். இந்தப் புனித ஜீவனை விட்டுப் பிரியவேண்டுமா?

"எனக்கும் தெரியவில்லையே; நமக்கு மாடு ராசி இல்லை போலிருக்கிறது! எத்தனையோ ஊர்களில் இருந்தோம்; மாடு வைத்துக் கொள்ள முடியவில்லை. இந்த ஊரில் எல்லா வசதியும் அமைந்ததே என்று வாங்கினோம்; திடுமென்று நம்மை நகரச் சொல்கிறார்களே!" என்று அங்கலாய்த்தாள் செல்லம்.

"நம்முடனேயே கொண்டு போய்விடுவோம்" என்றார் சாமிநாதன்.

"முடியுமா?"

"முடியாமல் என்ன? நம் மோட்டாரும் ப்ளாண்டியும் நம்கூட வருகிறமாதிரி இன்னியும் வரட்டும். இது முதலில் எனக்குத் தோன்றாத காரணம் என்ன தெரியுமா? ஊர்விட்டு ஊர் கொண்டு போனால் சில மாடுகளுக்கு ஒத்துக்கொள்கிறதில்லை என்று முன்னே யாரோ சொல்லக் கேட்டோமே! அதனால்தானே நாமும் நமக்கு மாடு வைத்துக் கொள்ளச் சரிவராது என்று இருந்துவிட்டோம்?"

"இப்போது மட்டும் ஒத்துக்கொள்ளுமா?"

"இப்போது பரவாயில்லை என்று தோன்றுகிறது. நூற்றுப் பத்து மைல்தானே? பூமிபாங்கு அதிக வித்தியாசப்படாது; ஒத்துக்கொள்ளும்."

"எதற்கும் நம் கௌடுவைக் கேட்டுக்கொள்ளலாம்" என்று சொன்னாள் செல்லம்.

இடையனைக் கேட்டார்கள். அவன் சிரித்தான். "அதெல்லாம் குசாலாய்க் கொண்டு போங்கள் அம்மா. ஒன்றும் கெடுதி செய்யாது. பத்து நாளில் அங்கே வந்து சேர்ந்துவிடும். நான் ஏற்பாடு செய்கிறேன், பாருங்கள்" என்றான். அவன் பெருமை அப்படி! பசுக்களைப் பற்றி இவர்களுக்குப் புல்லளவு கூடத் தெரியவில்லையே என்ற நகைப்பு.

"நீ என்ன ஏற்பாடு செய்வாய்?" என்று செல்லம் வியப்புடன் வினவினாள்.

"அதை ஓட்டிக்கொண்டு வரச் சொல்கிறேன், அம்மா. ரெயில் வண்டியில் ஏற்ற வேண்டாம். செலவும் ஜாஸ்தி. காலார நடந்து வந்துவிடும். பாருங்கள்" என்று சொன்னான் இடையன்.

"ஐயோ பாவம்டா" என்றாள் செல்லம், அன்புடன் இன்னியைப் பார்த்து. கைகள் அதன் கன்று பொன்னனை வருடின. காலைச் சமையலுக்காக மடி கட்டிக்கொண்டிருந்த யஜமானியை ப்ளாண்டீ பொறாமையுடன் பார்த்தது. பாவம், நாய்!

"ஏம்மா, மனுஷர்களே நடக்கிறார்களே! பூமி தானம் கேட்டுக்கொண்டு ஒரு பெரியவர் எத்தனை தொலைவு நடந்தே வருகிறாராம்! தினம் பத்து மைல் நடக்காதா பசுமாடு?

வழியிலே கொஞ்சம் போலச் செலவு செய்தால் போதும். ஓர் ஆள் ஓட்டிக்கொண்டு போவான், பத்திரமாய்....."

"அவனுக்குக் கூலி வேண்டாமா? ஆகாதா செலவு?"

"ரெயிலுக்கு மிகவும் அதிகமாகும்; ஐயாவைக் கேட்டுப் பாருங்கள்".

இடையன் சரியாகத்தான் சொன்னான். விசாரித்துப் பார்த்தார் சாமிநாதன். பசுவை ரெயில் வண்டியில் அனுப்புவதற்கும் நடையில் ஓட்டுவதற்கும் நிறைய வித்தியாசம் வந்தது. "கன்றுக்குட்டியைக் கையில் தூக்கிக்கொண்டு வருவான், பாபு! அவ்வப்போது நடையிலும் விடுவான். நீங்கள் பயப்படவே வேண்டாம்" என்று உறுதி மொழிந்தான் இடையன். தினமும் காலை மாலை பசுவைத் தட்டிக் கொடுத்துப் பால் கறந்தவன் பசுவுக்கு நன்மை தீமை எதுவோ அறியாமற் சொல்லுவானா? மூன்று மாதங்களுக்கு முன்பு பொன்னன் பிறந்தபோது கூட இன்னி பிழைத்தது, இடையனின் சமயோசித புத்தியினால்தான். இல்லாவிட்டால் இன்னி பிழைத்திருக்க முடியாது, காளைக் கன்று. பொன்னனும் இந்த வீட்டில் இருந்திருக்கமாட்டான். இதை நினைவூட்டிக் கணவருக்குத் தைரியம் சொன்னாள், செல்லம். அப்புறந்தான் சம்மதப்பட்டார் சுவாமிநாதன்.

குழந்தைகளுக்கு எல்லாமே விளையாட்டு, "அப்பா, நாம்தான் காரிலேயே ஊருக்குப் போகப் போகிறோமே! நம் காருக்குப் பின்னால் ஓடி வரட்டுமே இன்னி!" என்று யோசனை சொன்னாள், அவர்களுடைய எட்டு வயசுப் பெண்.

"நீ அதன்மேல் சவாரி செய்துகொண்டு வந்துவிடேன்! உன் இடம் காரில் பொன்னனுக்குக் கிடைக்கும்!" என்று கேலி செய்தான் அவளுக்குப் பெரியவனான பிள்ளை.

"மோட்டாரும் மாடும் ஒன்றா, அம்மா? மோட்டார் ஒரு யந்திரம். மாடு ஒரு புண்ணிய ஆத்மா அல்லவா? இன்னி சாவகாசமாய் நடந்து வரும். நடந்து வருவாள் என்று சொல்லக்கூட எனக்கு நாக்கு எழும்பாது போலிருக்கிறது" என்று பெண்ணுக்குச் சொல்கிற முறையில் பசுவினிடம் மரியாதை புலப்படுத்தினார் சாமிநாதன்.

"இன்னி! பொன்னா! நீங்களும் புது ஊருக்கு வரப்போகிறீர்களா?" என்று தொழுவத்திற்குப் போய்க் குலவினார்கள் குழந்தைகள்.

"நமக்கும் முன்னாடி அவை புது ஊருக்குப் போகின்றன!" என்று குழந்தைகளோடு சேர்ந்துகொண்டு குஷிப்படுத்தினாள் செல்லம்.

ஆம்: அப்படித்தான் உத்தேசித்திருந்தார்கள், போனதுமே புது ஊரில், பாலுக்குத் திண்டாடக் கூடாது என்றுதான், திட்டமிட்டபடியே முன்னதாக ஓட்டிவிட்டார்கள். "சௌக்கியமாய்ப் போய்ச் சேர்ந்ததும் இந்தக் கடிதத்தைத் தபால் பெட்டியில் போடப்பா" என்று சாமிநாதன் தம் கைப்பட எழுதிய கடிதத்தைக் கொடுத்தார், பொறுப்பேற்ற இடையனிடம். அப்படியும் மனசு கேட்காமல் சிப்பந்தி ஒருவருக்கும் கடிதம் எழுதினார்.

எதிர்பார்த்தபடி கடிதங்கள் வந்துவிட்டன. பசுவையும் கன்றையும் எங்கேவிட்டு வைத்திருக்கிறார்கள் என்பதையும் சிப்பந்தி குறித்திருந்தார். "நாம் இரண்டு நாள் முன்னதாகப் போனால் என்ன?" என்று கேட்டாள் செல்லம். ஆனால் மேலும் நாலு நாள் தாமதப்படும் போல் இருந்தது.

மேலிடத்து உத்தரவு "இங்கேயே இரு" என்று வந்துவிடுமோ என்று கதிகலங்கிப் போனார்கள். நல்ல வேளை, அப்படி ஒன்றும் இல்லை. நல்லபடியாக எல்லாரும் மோட்டாரில் புறப்பட்டார்கள்.

வழிநெடுக எழிலோங்கிய இயற்கைக் காட்சிகளை வியந்து பார்த்தபடி பேச்சும் பாட்டும் கும்மாளியுமாக வந்தனர் எல்லாரும். கிராமங்கள் பல கடந்தார்கள். "இங்கெல்லாந்தான்

இரவுகளில் இன்னி தங்கித் தங்கி வந்திருக்கிறது" என்று நினைத்துக் கொண்டார்கள். "ஜிங் ஜிங்கென்று இன்னி இந்த வழியில் தான் நடந்திருக்கிறது; இதே வழியில்தான்" என்று பேசிக் கொண்டார்கள். "இதோ இந்த வைக்கோற் போரில் பாய்ந்திருப்பான் நம் பொன்னன்!" என்று சிரித்தார்கள். அந்த வழியில் ஒரு கிராமத்தில் சந்தை கூடியிருந்தது. இறங்கிப் பார்த்த பிறகு செல்லம் மாடு கன்றுக்குக் கழுத்தில் அணிவிக்கும் மணி கோத்த கயிறுகள் இரண்டு வாங்கினாள். "ஏன்னா, வழியில் சந்தைகளில் சாமான்களை வாங்கிக்கொண்டு நம் இன்னிமேல் பொதி ஏற்றியிருக்க மாட்டானே!" என்று சந்தேகப்பட்டுக் கேட்டாள். "அவனுந்தான் நம் பொன்னனை அங்கங்கே சுமந்திருப்பான்!" என்று சொன்னார் சாமிநாதன்.

பல இடங்களில் மோட்டாரை நிறுத்தினார்கள். அவர்களுடனேயே வந்து கொண்டிருந்த 'ப்ளாண்டீ', "என்னையுந்தான் சற்றுக் காலார நடக்கவிடுங்களேன்; அடைத்துக் கூட்டி வருகிறீர்களே!" என்று சொல்லாத குறையாக நடந்துகொண்டது. அதற்காக மட்டுமின்றி, எஞ்சினின் சூடு தணியவும், தங்கள் கால்களுக்குச் சற்றுச் சுதந்தரம் கொடுக்கவும் வேண்டியிருந்தது. ஏரிக்கரையில் சிற்றுண்டி சாப்பிட்டார்கள். ஆங்காங்கு மர நிழல்களிலும் இளைப்பாறினார்கள். கிளம்பிய நான்கு மணி நேரத்திற்குப் பின் வந்து சேர்ந்தார்கள் புது ஊருக்கு.

காரியாலயத்தைச் சார்ந்த இருப்பிடம் சாமிநாதனுக்குக் கிடைத்திருந்தது. நல்ல பங்களா; மோட்டார் லாயத்துடன் ஒட்டியிருந்த இடம் தொழுவம் அமைக்கவும் இன்னியைக் குடியிருத்தவும் ஏற்றதாக இருந்தது. இன்னி தங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கும் என்று நினைத்தவர்களுக்கு, அதைக் காணாமல் ஏமாற்றம் உண்டாயிற்று. காரணம் கூறினார் சிப்பந்தி. "நேற்று அதற்கு உடம்பு சரியாக இருக்கவில்லை. ஓட்டி வந்தவன் அதைத் தன்னிடம் வைத்திருந்து வைத்தியம் பார்ப்பதாகச் சொன்னான்" என்றார். இன்னியின் கறவைப் பாலைக் காய்ச்சி அருந்தி, புதுவீட்டில் தூங்க வேண்டும் என ஆசைப்பட்டது நடக்கவில்லை. உடைமை என்றும் விருப்பம் என்றும் ஆதங்கப்படும் மானிடரின் பேதமையை நகையாடிவிட்டதோ இந்த நிகழ்ச்சி? அப்படித்தான் நினைக்க வேண்டியதாயிற்று.

மறுநாள் இன்னி வந்தாள். பொன்னனும் வந்தான். கழுத்தை நீவி, முதுகைத் தட்டி, நெற்றியைத் தடவி, பலவிதமாகத் தங்கள் அன்பினை வெளியிட்டார்கள். ப்ளாண்டியும் இன்னியைச் சுற்றிச் சுற்றி வந்து தாவி விளையாடி வரவேற்றது. பொன்னனும் ப்ளாண்டியும் நெற்றியோடு நெற்றி உராய்ந்து சந்தோஷம் தெரிவித்துக்கொண்டன.

"என்ன உடம்பு இதற்கு?" என்று இன்னியைப் பற்றிக் கேட்டதற்கு இடையன், "வெளிக்குக் கழிசலாய்ப் போகிறது; இனிமேல் சரியாய்ப் போகும். குணப்படுத்தினேன்" என்று தெரிவித்துவிட்டு, தனக்குச் சேர வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொண்டு வேறோர் ஆள்காரனை ஏற்படுத்திக் கொடுத்துச் சென்றான்.

பால் கொடுத்தாள் இன்னி. ஆனால் முன்னைப்போல் கொடுக்கவில்லை. மேய்ச்சலுக்குப் போனாள்; ஓய்ச்சலுடன் திரும்பினாள். நடையும் மிடுக்கும் ஒடுங்கியிருந்தன. வாயில்லாப் பிராணி; ஓட்டி வந்த ஆள் நன்றாகக் கவனித்தானா என்பதைச் சொல்ல முடியவில்லை. ஆனால் சாமிநாதன் தம்பதிகள் ஊகித்தனர். 'நடையில் ஓட்டி வரச் செய்தது தவறோ!' என்று மனம் குடைந்தது. 'முன்னைவிட நிறையத் தீனி தின்கிறது. பால் குறைந்துவிட்டது!' என்று தெரிந்ததனால் காலை மாலைகளில் அடிக்கடி சொல்ல நேர்ந்தது.

பத்துப் பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு ஒருநாள் இன்னி மேய்ச்சலினின்று திரும்பும் சமயம், சாமிநாதனும் அவர் மனைவியும் சில நண்பர்களுடன் உரையாடியபடி பூந்தொட்டிகள் சூழ்ந்த வட்டமான புல்லுத்தரையில் அமர்ந்திருந்தார்கள். ப்ளாண்டி செல்லத்தின் நாற்காலிக்கு அருகில் நாயுறக்கம் போட்டுக்கொண்டிருந்தது. மணி ஓசை

கேட்டது. இன்னியை நோக்கி ஓடித் தாவிப் போயிற்று. இன்னி ஒரு தினுசாக அலுத்து நடந்து வந்துகொண்டிருந்தது.

"உங்கள் பசுவா?" என நண்பர் கேட்டார்.

"ஆமாம் ஸார்; அதற்கென்னவோ உடம்பே சரியில்லை. ஆசையாய் அங்கிருந்து இங்கே கொணர்ந்தோம். வந்தது முதற்கொண்டு என்னவோபோல் இருக்கிறது. தீனியோ முந்திவிட ஜாஸ்தி இத்தனை இத்தனை தின்கிறது; பால் மிகவும் குறைவாகிவிட்டது. என்ன வியாதியோ! அங்கேயே விற்றிருக்கலாம் போல் தோன்றுகிறது."

ப்ளாண்டியின் கூச்சலுக்கு ஈடுகொடுத்துக் கொண்டே தலைவாசலிலிருந்து போர்ட்டிகோ வரை வந்துவிட்ட இன்னி கொட்டிலை நோக்கி வலதுபுறம் சென்ற பிறகுதான் ப்ளாண்டி அதைப் பின் தொடராமல் வாலை ஆட்டிக் கொண்டு நின்றுவிட்டுத் திரும்பிற்று.

"இந்த ஊரில் பாலுக்குச் சிரமந்தான். நீங்கள் மாடு வைத்திருப்பது நல்லதுதான்" என்றாள் நண்பர் மனைவி.

"இதைக் காப்பாற்றுகிற கஷ்டம் குறைச்சலா என்ன? சிவனே என்று பால் வாங்கிச் சாப்பிட்டுவிடலாம். எனக்குப் பசு ஆசை தீர்ந்தது" என்று சலித்தாள் செல்லம்.

அங்கே கொட்டிலில் இன்னி, பொன்னனுக்கு எட்டாத இடத்தில் நின்றுகொண்டு, இடையனை எதிர்பார்த்தது. அவன் வந்தால்தானே தன் குழந்தையை நக்கிக் கொடுத்துப் பாலூட்ட அதற்குப் பாக்கியம்?

மறுநாளும் இன்னி மேயப் போயிற்று. திரும்பியும் வந்தது. வரும்போதே தலையை அப்படியும் இப்படியுமாக ஆட்டிக்கொண்டு வந்தது. புல்வட்டத்தில் 'டீ' சாப்பிட்டுக் கொண்டு சாமிநாதனும் செல்லமும் உட்கார்ந்திருந்தார்கள். ப்ளாண்டி குழந்தைகளுடன் உலாவப் போயிருந்தது.

"ஏன் எப்படியோ தலையாட்டுகிறது?" என்று இன்னி போகும் போக்கையே பார்த்தாள் செல்லம்.

"ப்ளாண்டியைக் காணவில்லையென்றோ என்னவோ?" என்றார் சுவாமிநாதன்.

அப்புறம் யாராரோ நண்பர்கள் வந்ததனால் பேசிக்கொண்டே இருந்தார்கள். இரண்டு மணி நேரம் கழித்து இடையன் வந்தபோது இன்னி படுத்துக்கிடந்தது. உயிரற்ற உடலாகக் கிடந்தது.

"விஷச் செடி எதையோ தின்றுவிட்டது போலிருக்கிறது" என்றான் இடையன்.

"அப்படித் தின்னுமா? இயல்பாகவே அறிவுண்டே! தின்னாதே!" என்றாள் செல்லம்.

"ஏதாவது விஷப்பூச்சி, பாம்பு தீண்டிவிட்டதோ என்னவோ! ஏதோ விஷக் கோளாறுதான் அம்மா இது" என்று இடையன் முடிவாகச் சொன்னான்.

சாமிநாதன் பேசவே இல்லை. என்னவோ மாதிரி பார்த்துக்கொண்டிருந்தவர் அப்பால் போய்விட்டார்.

"இன்னி செத்துப் போச்சு. பொன்னுக்கண்ணா. உனக்கு அம்மா இல்லையாடா?" என்று செல்லம் கண்கலங்கி, தன் குழந்தைகளுக்கெதிரில் பொன்னனைத் தடவிக் கொடுத்தாள்.

அன்றிரவு தூக்கம் வராமல் இன்னியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் சாமிநாதன் சொன்னார்; "இன்னி தற்கொலை செய்து கொண்டுவிட்டது, செல்லம். விஷம் முதலில் என் நாவிலிருந்து வந்துதான் இன்னியின் மனத்தில் புகுந்து வேலை செய்துவிட்டது. நினைவு இருக்கிறதா? நேற்று அது எனக்குச் சமீபத்தில் போய்க்கொண்டிருந்தபோதுதான் 'இத்தனை இத்தனை தீனி தின்கிறது' என்றேன். அதைக் கேட்டுவிட்டுத்தான் இன்று அது ஏதோ

விஷப்பூண்டு தின்றுவிட்டது. நம் வீட்டிலேயே சாக வேண்டும். தன் பிள்ளையின் அருகில் உயிரை விடவேண்டும் என்று வேதனையுடனேயே வந்து விழுந்துவிட்டது."

செல்லம் 'அப்படியும் இருக்குமா?' என்று நினைத்தவாறு கணவரைப் பார்த்தாள். அவருடைய கண்கள் கணகணவென்றிருந்தன. நீர் துளிக்கவில்லையே தவிர அவர் மனம் தவியாகத் தவிக்கிறது என்பதைக் கண்டாள்.

"அத்தனை தெரியுமா அதற்கு? ஊர் மாற்றினால் ஒத்துக்கொள்ளாது என்று கேள்விப்பட்டிருந்தோம். இப்போது கண்ணால் கண்டாச்சு. நமக்குப் பசு ஆசை வேண்டாம். குழந்தைகளின் படிப்பு விசாரம் ஒன்றே போதும்" என்று சமாதானப்படுத்திவிட்டு, கணவரின் மனத்தில் தோன்றி இருக்கும் வேதனையைப் பற்றி ஆலோசனை செய்யத் தொடங்கினாள் செல்லம்.

ஆசை ஆசையாய்ப் பேணிப் பராமரித்தார்கள்; உண்மைதான். ஆனால் அது தீனி மிகைப்படத் தின்று பாலையும் குறைத்துக் கொடுத்ததும் பொறுக்கவில்லை. கணவரிடம் அதைப் பற்றி அடிக்கடி முறையிட்டவள் அவள்தான். " தின்னும் தீனிக்கு ஈடாகப் பால் கிடைக்கவில்லை" என்பதை, இல்லத் தலைவியான அவள் குறிப்பாகக் கவனிக்க வேண்டியிருந்ததே! என்னதான் பக்தியும் பாசமுமாக வளர்த்தாலும் பிரதிபலனை எதிர்பார்க்கும் சுயநலம் எங்கேயோ உள்ளே இருந்துகொண்டு வினை செய்துவிடுகிறதே! உண்டான மனக்குறையினால் தினம் ஒரு தடவையாவது புகார் செய்தாள். அவரும் ஏதோ பிரஸ்தாபப் போக்கில் நண்பர்களிடம் சொன்னார். அதனால்தான் இன்னி ரோசப்பட்டு மாண்டாள் என்கிறாரே! நம்பத்தக்க விளக்கம்தான். எனினும் அப்படி நினைத்துக்கொண்டிருந்தால் நிம்மதி உண்டாகுமோ?

"ஆறறிவு படைத்த மனிதருக்குத்தான் இத்தனை சிந்தனையும் உண்டு. பசுவுக்குக் கிடையாது. நீங்கள் கேள்விப்பட்டதில்லையோ? 'அவன் என்ன மனுஷனா, மிருகமா?' என்று சொல்வார்கள். அதையே தெலுங்கில், 'மனுஷியா பசுவா?' என்பார்கள். என்னவோ அது போகிற வேளை" என்று அவ்வப்போது ஆறுதலாக ஏதாவது சொல்வாள் செல்லம். சில சமயம், "இதென்ன அசட்டுப் பிசட்டென்று ஒரு நினைப்பு?" எனக் கடிந்துரைப்பாள். ஆனால் சாமிநாதன் மட்டும் நினைவு மாறாமல், "எங்கள் மாடு தற்கொலை செய்துகொண்டது, ஸார்!" என்று சொல்லிக்கொண்டுதான் இருந்தார். "இதென்ன, புதிய சமாசாரம்?" என்று அவர்கள் கேட்டால், "தீனி வைத்துக் கட்டுப்படியாகவில்லை என்று சொன்னேன். மறுநாள் இப்படிச் செய்துவிட்டது" என்று விளக்கினார்.

ஒருநாள் இப்படித்தான் ஒரு நண்பரின் குடும்பத்தினருக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். ப்ளாண்டி அங்கேயேதான் வளைய வந்து கொண்டிருந்தது. 'இன்னி' என்ற பெயர் காதில் விழுந்ததனால் போலும் இரண்டு குரைப்புக் குரைத்துவிட்டுச் சாமிநாதனின் முழங்கால்களை உராய்ந்தவாறு சற்று நின்று விட்டு நாற்காலிக்கு அடியில் ஒடுங்கியது.

அப்பொழுது நண்பரின் புதல்வி அதைப் பார்த்துவிட்டு, "நாலு மாதத்துக்கு முந்தி நாங்கள் பார்த்தோமே! அதே நாய்தானா இது? எவ்வளவு மாறுதல், நன்றாக உயர்ந்து வளர்ந்துவிட்டது!" என்று ஆச்சரியப்பட்டாள்.

"ஆமாமாம்; அதே ப்ளாண்டிதான். நல்ல வளர்த்திதான். மாமிசமும் பாலும் தின்று விட்டுச் சுற்றுகிறது வெறுமனே. எனக்கு முன்னாடியே தோன்றியிருந்தால் அந்த இன்னியைப் பழித்திருப்பேனா? தீனி போடுகிறோம், பால் சரியாகக் கொடுக்கவில்லை என்றேனே! இது என்ன பாலா தருகிறது? இது தோன்றவே இல்லை எனக்கு" என்றார் சாமிநாதன்.

நண்பர்களுக்குச் சிற்றுண்டி கொண்டு வந்து வைத்த செல்லம். "இவர் இப்படிச் சொல்வதை நான்கூட இப்போதுதான் கேட்கிறேன்" என்றாள் அவர்களிடம்.

"நன்றாக வளர்ந்துவிட்டதே என்றதும் தோன்றிற்றுப் போலிருக்கிறது! ஏன் ஸார்? சென்ற மாதம் உங்களுக்குப் 'போன்' பண்ணினேனே, அப்பொழுது உங்கள் பேச்சுடன்கூட இதன் குரைப்பும் எனக்குக் கேட்டது!" என்று நண்பர் நகைத்தார்.

"ஓ, ஆமாமாம். அப்பொழுது என் பக்கத்தில்தான் இருந்தது" என்று சாமிநாதனும் சிரித்தார்.

இதற்குப் பிறகு ஓர் விந்தை நிகழ்ந்தது. செல்லம் கைக்குழந்தையை இடது புறத்து ஆளோடியில் விளையாட விட்டுவிட்டு, சித்திரம் போடப் பழகிக்கொண்டிருந்த மூத்த பெண்ணிடம், "கவனிச்சுக்கோடி" என்று சொல்லிவிட்டுச் சமையற்கட்டுக்குப் போனாள். சாக்கட்டியால் தரையில் படங்கள் வரைந்து அழகு பார்த்துக்கொண்டிருந்த ரமா பாப்பாவுக்கு விளையாட்டுப் பொருள் ஏதாவது கொடுக்க விரும்பினாள். குழந்தையின் தத்தக்கப் பித்தக்க நடைக்கு ஏற்றபடி வராந்தாவில் உருட்டிப் போடுவதற்காக வர்ணக் கட்டைகள் இரண்டு கொண்டுவர உள்ளே போனாள். மீண்டும் அவள் ஆளோடிக்கு வந்தபோது ஒரு காட்சியைக் கண்டாள். "அம்மா, அம்மா" என்று கூப்பாடு போட்டாள். ப்ளாண்டியின் விபரீதக் குரைப்பினூடே ரமாவின் குரல் எடுபடவில்லை.

"எதற்கு இந்தப் பாழும் கூச்சல்?" என்று அலட்சியமாக இருந்த செல்லம், ப்ளாண்டியின் குரைப்புச் சத்தம் குறைந்து வந்ததுமே தன் பெண்ணின் கூக்குரலைச் செவியுற்றாள். ஓடி வந்தாள்.

கைக்குழந்தைக்குக் கொஞ்சம் தூரத்தில் ப்ளாண்டி துடித்துப் புரண்டது. அதன் அருகில் கிடந்தது ஒரு பாம்பு; நாயின் தாக்குதலினால் குதறப்பட்டுக் கிடந்தது.

"அம்மாடி!" என்று குழந்தையை வாரித்தூக்கிக்கொண்ட செல்லம் பாம்பையே பார்த்து நின்றாள். "அம்மா, ப்ளாண்டி ஒரேயடியாய்ப் பாய்வதைப் பார்த்தேன், அம்மா! அந்தத் தூணண்டைதான் பாம்பு வந்துகொண்டிருந்தது. அம்மா, அதன் மேலே சடாரென்று தாவியதும், அம்மா, ப்ளாண்டி எப்படிச் சண்டை போட்டது தெரியுமா? கூப்பிடக் கூப்பிட நீ வரவில்லை!" என்று ரமா விவரித்தாள்.

"ப்ளாண்டியைக் கவனிக்க யாருமே இல்லையேடி! வேலைக்காரர்களெல்லாரும் ஆளுக்கு ஒரு காரியமாய்ப் போய்விட்டார்களே!" என்று கைபிசைந்து நின்றாள் செல்லம்.

தடுமாறிக் கொண்டிருந்த எஜமானிக்கு, "இனி, நீங்கள் எது செய்தாலும் என் உயிர் நிற்காதம்மா" என்று சொல்லுகிறாப்போல முனகிவிட்டு ஓய்ந்தது ப்ளாண்டி. தன்னுடைய தகுதியையும் மதிப்பையும் உணர்த்திவிட்டு மானமாகப் போய்ச் சேர்ந்தது.

முற்பகலில் சாமிநாதன் 'கேம்ப்'பிலிருந்து திரும்பினதும், அறிந்தார். சற்றுப் பொறுத்து, "ஹூம், தின்று கொழுத்து வெறுமனே சுற்றுகிறது என்றேனே! இப்படிச் செய்துவிட்டது" என்று மட்டும் பெருமூச்சுடன் சொல்லி நிறுத்திவிட்டார்.

நா ஊறிற்று, செல்லத்திற்கு. "எப்படிச் செய்துவிட்டது? நன்மைதானே செய்திருக்கிறது? ஆபத்து என்றால் உதவும் என்றுதானே நாய் வளர்க்கிறதாம்? ஆபத்து வராதவரை அதன் அருமை தெரியுமா? அப்படியும் மனத்தில் உள்ளூறத் தெரிந்துதானே போஷணை செய்கிறோம்? என்னவோ மாட்டைப் பற்றி ஆதங்கத்தில் அன்றைக்குச் சொன்னீர்கள். இன்றைக்கு நாயைப்பற்றி ஆதங்கத்தில் சொல்கிறீர்களாக்கும்!" என்று சொல்லத் தோன்றினாலும் நா எழும்பவில்லை. ப்ளாண்டி செய்த உதவிதான் எத்தனை மகத்தானது என்னும் நினைப்பினால் பேச முடியவில்லை. "நாயும் மாடும் ஒன்றா? நாயை வீட்டுக்குள்ளே விட்டு வைப்பதே அசுசி என்று சாஸ்திரம்; மாடுதான் கட்டாயம் வீட்டில் இருக்க வேண்டும் என்பார்கள். நீங்கள் அருமையாய் நாய் வாங்கினீர்களோ இல்லையோ! நான் பசுமாடு வாங்கப் போகிறேன்!" என்று அவளேதான் சொன்னாள், சென்ற ஆண்டு. அதை நினைத்துக் கொண்ட பிறகு எளிதில் பேச முடியுமா?

வாயில்லாப் பிராணியின் பெருமையை நினைந்து வாயுள்ள மனிதர் வாயடைத்துப் போகிற அற்புதம் இந்த உலகத்திற்குப் புதுமை அல்ல.

**********

(கலைமகள், டிசம்பர், 1955)